Form No.53
(See Rule 43)
DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**
**CC.No.6/2023**

**2025-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21-ம் தேதி வியாழக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 13 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 13 | தொழில் | - | மருத்துவர் |
| பெயர் | - | திரு.சதீஷ்குமார் | வட்டம் | - | வண்டலூர் |
| த/பெ | - | திரு.ராஜேந்திரன் | சமயம் | - | |
| கிராமம் | - | SRM Global Hospital | வயது | - | 33/2025 |
| சாதி | - | | | | |

| | |
|---|---|
| நாள் ( Dated) : 21-08-2025 | |
| **நீதிமன்ற புள்ளி ( IN COURT POINT)** | |
| இடம் ( Venue) | - நீதிமன்ற காணொலி அறை. வால்பாறை |
| ஒருங்கிணைப்பாளர் ( Co-Ordinator) | - தலைமை எழுத்தர், மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், வால்பாறை |
| இந்த வழக்கில் வழக்கறிஞர் | அரசுக்காக – S.P.ராமச்சந்திரன் LLM.APP Gr-1 |
| | எதிரிக்காக வழக்கறிஞர் திரு.R.R.பெருமாள், B.A.,B.L., |
| **தொலைதூர புள்ளி (IN REMOTE PONIT)** | |
| இடம் ( Venue) | மாவட்ட நீதிமன்றம் செங்கல்பட்டு |
| ஒருங்கிணைப்பாளர் ( Co-Ordinator) | திரு.S.கண்ணன், System Analyst |
| சாட்சி ( Witness) | திரு.சதீஷ்குமார் (அ.சா. 13) |

மாவட்ட நீதிமன்றம் செங்கல்பட்டு நீதிமன்ற காணொலி அறைக்கு வரவழைக்கப்பட்டு நீதிமன்ற காணொலி சாதனம் மூலம் விசாரணை செய்யப்படுகிறது.

**<u>21-08-2025</u>**
**( எதிரி ஆஜர்)**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது சென்னை SRM Global Hospital -ல் மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 30-11-2022-ம் தேதி பகல் 01.30 மணிக்கு வால்பாறை அரசு மருத்துவமனையில் மருத்துவராக பணியில் இ ருந்தபோது 30 வயதுடைய ஆண் நபர் மணி C/o அய்யப்பன் என்பவரை அவரது நண்பர் சிகிச்சைக்கு அழைத்து வந்தார். நான் அவர் நண்பரை விசாரித்தபோது சுமார் 20

மீட்டர் உயரத்திலிருந்து பவின் ஹோம்ஸ்டே என்ற இடத்தில் 30-11-2022-ம் தேதி பகல் 01.15 மணிக்கு விழுந்துவிட்டதாக தெரிவித்தார். நோயாளி வரும்போது மூச்சு திணரல் இருந்தது. அவரை பரிசோதிக்கும் போது சுயநினைவற்று இருந்தார். மேலும் அவருடைய ரத்த அழுத்தம் நாடிதுடிப்பு ஆக்ஸிஜன் அளவு அனைத்தும் மிகவும் குறைவாக இருந்தது. அவருடைய கருவிழி முழுவதும் விரிவடைந்த நிலையில் இருந்தது. உடனடியாக உயிர்காக்கும் அவசர சிகிச்சையான ACLS பின்பற்றப்பட்டு செயற்கை சுவாசம் அளிக்கப்பட்டு CPR என்னும் முதலுதவி சிகிச்சை மூன்று முறை வழங்கப்பட்டுள்ளது. நெற்றியில் 1X1 செ.மீ. அளவிலான துளை வடிவிலான காயம் காணப்பட்டது. அதற்கான தையல் போடப்பட்டுள்ளது. மேல் சிகிச்சைக்காக பொள்ளாச்சி தலைமை அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டது. **(நான் பதிவு செய்த விபத்து பதிவேடு அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

வலிப்பு நோய் உள்ள ஒரு நபர் வெயிலில் அதிக நேரம் நின்று அதனால் அவருக்கு மயக்கம் ஏற்பட்டு அந்த நேரத்தில் வலிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான்.

**மறுவிசாரணை**

நான் சிகிச்சையளித்த நபருக்கு வலிப்பு ஏற்பட்டதற்கான அறிகுறிகள் நான் சிகிச்சையளிக்கும் போது காணப்பட்டதா என்றால் அந்த நபர் பேச்சு மூச்சற்று மயக்க நிலையில் இருந்ததால் கண்டறிய இயலவில்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.